

# பயணம்

இதழ்- 17 ஏப்ரல் -2020

*ஸ்ரீ அண்ணன் சுவாமிகளிடம் சமர்ப்பிக்கப்படுகிறது--இறை நாட்டம் கொண்ட அன்பர்களுக்காக.....

www.sriannanswamigal.com

www.sriannanswamigalmobile.in

'Sri Annan Swamigal' in Google Play Store

**முன்னுரை**

இறைவனை நாடுபவர்கள்,பெரும்பாலும் தனது ஆரம்ப நாட்களில் பல குழப்பங்களுக்கு ஆளாகின்றனர். தூசி படிந்த அறையை சுத்தம் செய்ய முற்படும்போது பெரும் புழுதி கிளம்பி முன்பிருந்த வெளிச்சத்தையும் மறைப்பது போல ,ஆத்ம சாதகனுக்கு தற்காலிக இருளும், மயக்கமும் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் அவனுக்கு துணை, குருவின் அரவணைப்பு மட்டுமே. குருவருளும், இறையருளும் யாருக்கு கிடைக்கின்றதோ.. அவர் பேறு பெற்றவர். அவ்வாறு அருள் கிடைக்க ஒரு சாதகன் தன்னை தயார் படுத்திக்கொள்வது மிகவும் அவசியம்.

இறைவனே எல்லாம் செய்வான் எனக்கு, என தமோ குண தாக்கத்தில் ஒருவன் உறங்கிகொண்டிருந்தால், மேலும் மயக்கத்தில் ஆழ்ந்து போவான். எனவே தேடலின் தீவிரம், சரணாகதியின் அவசியம்,இறைவன் நம்மை ஆட்கொள்ளும் விதம்,குருவின் அவசியம், குருவின் மகிமை, குருவின் அருள் இவற்றை பற்றி நன்றாக உணர்ந்து தெளிந்த மஹாத்மாக்களின் அனுபவங்களை இங்கு நாம் தருகிறோம்.

மற்றும் சமயம், சமூக நல விழிப்புணர்வு கட்டுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த தொடர் இதழ், ஆத்ம சாதகர்களுக்கு, இறைஞான தரிசனம் என்ற பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

--இணைய நிர்வாகிகள்

## உள்ளே

| படைப்புக்கள் | பக்கம் எண் |
|---|---|


**குருபக்தியின் மகிமை……………………………….4**

**சைவசித்தாந்த சுருக்கம்…………………………..13**

**ஒரு காதல் காவியம் [சிறுகதை]………….38**

# குருபக்தியின் மகிமை



ஸ்ரீராமானுஜர் திருப்பதியில் அடிவாரத்தில், சீடர்கள் எழுப்பும் சந்தேகங்களுக்கு, தகுந்த விளக்கங்களை அளித்துக் கொண்டிருந்தார் `அப்போது ‘மோரு... மோரு...’ என்று ஒரு பெண்மணியின் குரல் கேட்டது.

தலையில் மோர்ப்பானை சுமந்து, இடையர் குலப் பெண்மணி ஒருத்தி தெருவில் நடந்து சென்றுஉ கொண்டிருந்தாள். சீடர்களுக்கு மோர்

சாப்பிட வேண்டும் என்று தோன்றியது.ஆனால், குருநாதர் பாடம் நடத்திக் கொண்டிருக்கிற இந்த வேளையில் மோர்க்காரியைக் கூப்பிட்டால், பாடத்தின் மேல் கவனம் இல்லாதது போல் ஆகிவிடும் என்பதால், மோர் ஆசையைத் துறந்து, பாடத்தில் கருத்தாக இருந்தார்கள். ஆனாலும், அன்றைக்கு மோர் குடித்தே ஆக வேண்டும் என்பது எழுதப்பட்டிருந்த ஒன்று போலும்.

இவர்கள் அனைவரும் கூட்டமாக அமர்ந்து ஏதோ சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருப்பதாக நினைத்த மோர்க்காரப் பெண்மணி, இந்த இடத்தில் பானையை இறக்கி வைத்தால் நல்ல வியாபாரம் ஆகிவிடும் என்று தீர்மானித்து, இவர்கள் பக்கம் நடந்து வந்தாள். ஐயா... சாமீ... நல்ல மோரு. ஆளுக்கு ஒரு குவளை குடிச்சீங்கன்னா, தெம்பா இருக்கும். உஷ்ணம் ஓடியே போயிடும் என்று சொன்னபடி, மோர் பானையைக் கீழே இறக்கி வைத்தாள்.

ஏற்கெனவே பசியிலும் அசதியிலும் இருந்த சீடர்களுக்கு, மோர் பானையைப் பார்த்ததும் வயிறு கபகபவென்று இருந்தது. ஆளாளுக்கு, எனக்கு... எனக்கு என்று கேட்டு வாங்கிக் குடித்தனர்.

அவர்களில் ஒரு சில சீடர்கள் இன்னொரு குவளையும் வாங்கிச் சாப்பிட்டனர். மோரின் தரம் அப்படி. எல்லோருக்கும் மோர் கொடுத்து முடித்ததும், பானையின் உள்ளே சற்று எட்டிப் பார்த்தாள் பெண்மணி. கிட்டத்தட்ட பானை காலியாக இருந்தது. நிறைந்த மனத்துடன் சீடர்களையும் ராமானுஜரையும் பார்த்தாள்.

அப்போது அவள் மனத்தில் திடீரென ஓர் ஏக்கம் வந்தது. அதாவது, தானும் இவர்களைப் போல் பக்தித் திறனில் தேர்ந்து விளங்க வேண்டும் என்று ஆசை கொண்டாள். திடீரென்று அப்படி ஒரு பக்தி எழுந்தது ஏன்? மகான்களின் பார்வை விசேஷம் அப்படிப்பட்டது. அதனால், பக்தியின் பிடியில் திடீரென அகப்பட்டுக் கொண்ட காரணத்தால், மோருக்கான காசை கேட்டுப்பெற வேண்டும் என்பதையும் மறந்து நின்றாள்.

அப்போது அந்தப் பெண்மணியைப் பார்த்து, “அம்மா… நீ எங்களுக்குக் கொடுத்த மோரின் விலை என்ன?” என்று கேட்டார் ராமானுஜர். மோர் நன்றாக வியாபாரம் ஆகும். காசு கிடைக்கும் என்ற

ஆசையில்தான் இங்கே வந்தாள். ஆனால், இப்போது இவளது மனநிலையே வேறாக இருக்கிறது.

ராமானுஜரை மரியாதையுடன் பார்த்தாள். பிறகு, வேணாம் சாமீ. மோருக்குக் காசெல்லாம் வேணாம்... அதை வெச்சிட்டு நான் என்ன பண்ணப் போறேன்?! என்று இழுத்தாள்.

அப்படீன்னா காசுக்குப் பதிலா ஏதாவது பொருள் வேணுமா? என்று கேட்டார் சீடர் ஒருவர். ராமானுஜரை நமஸ்கரித்த அந்தப் பெண், “எனக்குக் காசும் வேணாம்... பொருளும் வேணாம் சாமீ. பெருமாள் இருக்கக்கூடிய பரமபதத்தை அடையணும்; மோட்சம் கிடைக்கணும். அதுக்கு வழியைக் காட்டுங்க. சந்தோஷமா போயிடுவேன்” என்றாள். ராமானுஜர் ஆச்சரியத்துடன் பார்த்தார்.

ஆசார நியமங்களோ, சாஸ்திர ஞானமோ அறியாத அவளுக்குள், ‘மோக்ஷம் வேண்டும்’ என்கிற ஆசை தோன்றியது விந்தைதானே! தவிர, இப்படி ஒரு கோரிக்கையை அவள் வைப்பாள் என்றும் அவர் எதிர்பார்க்கவில்லை.

ஒரு சில நிமிட இடைவெளிக்குப் பிறகு, “கவலைப்படாதம்மா... உன்னோட நல்ல குணத்துக்கு நிச்சயம் மோட்சம்தான் கிடைக்கும். சந்தோஷமா போயிட்டு வா” என்றார் அவர். ஆனால், அந்தப் பெண்மணி விடவில்லை. “ஒங்க வாக்கு அப்படியே பலிக்கட்டும் சாமீ. ஆனா, அந்த மோட்சம் எனக்குக் கிடைக்கறதுக்கு ஒரு வழியைக் காட்டுங்க. நான் போய்ச் சேர்றேன்” என்றாள். ராமானுஜர் சிரித்தார்.

“அம்மா... நீ நினைப்பதுபோல் மோட்சத்துக்கு ஒரு வழியைக் காட்டுவதோ, மோட்சம் வழங்குவதற்கு உண்டான தகுதியோ, எனக்கோ இங்கு கூடி இருக்கின்ற சிஷ்யர்களுக்கோ இல்லை. மேலே திருமலையில் இருக்கின்றானே ஒருவன்... ஏழுமலைக்குச் சொந்தக்காரன்... அவன்கிட்டப் போய்க் கேள். உனக்கு வேண்டியதை எல்லாம் அருளுகின்ற தகுதி அவனுக்குத் தான் உண்டு” என்றார்.

இதற்குப் பிறகும் அந்த மோர்க்காரப் பெண்மணி நகர்கிற வழியாக இல்லை. “சாமீ... மேலே இருக்கிற ஏழுமலையான் கிட்ட போய் எத்தனையோ தடவை ‘மோட்சம் வேணும் மோட்சம்

வேணும்’னு கேட்டுப் பாத்துட்டேன். ஆனா, அங்கே இருக்கிற பெருமாள் வாயைத் தொறந்து பேசக்கூட மாட்டேங்கிறாரே…” என்றாள் பொருமலாக.

“அப்படி இல்லேம்மா… அவருக்கு எத்தனை வேலை இருக்கோ… அதை ஒரு குறையா சொல்லிட்டு இருக்காதே. உன் மனசுல படறதை – நீ கேக்கணும்னு நினைக்கறதை அவர்கிட்ட கேட்டுக்கிட்டே இரு. என்னிக்கானும் ஒருநாள் நிச்சயம் செவி சாய்ப்பார்” என்றார் ராமானுஜர்.

“இல்லீங்க சாமீ. ஒங்களைத்தான் நம்புறேன். ஒங்களைப் பாத்த பிறகு எனக்கு நம்பிக்கை வந்திடுச்சு” என்றாள், குரலில் உற்சாகத்துடன். இவள் ஏதோ ஒரு தீர்மானத்துடன்தான் இருக்கிறாள் போலிருக்கிறதே’ என்று யோசித்தார் ராமானுஜர். மீண்டும் அந்தப் பெண்மணியே, விநயமாகப் பேசினாள்.

“சாமீ… எனக்கு மோட்சம் தரச் சொல்லி பெருமாள்கிட்ட சிபாரிசு செஞ்சு நீங்கதான் ஒரு ஓலை எழுதித் தரணும். ஒங்களை மாதிரி பெரியவங்க ஓலை கொடுத்தா, இருக்கிற வேலையை எல்லாம் விட்டுட்டு பெருமாள் எனக்குப்

பதில் சொல்லுவாருன்னு தோணுது” என்றாள் தெளிவாக. இதற்கு மேலும் மறுக்க இயலாது என்று உணர்ந்த ராமானுஜர், சிஷ்யனிடம் ஓர் ஓலை நறுக்கும், எழுத்தாணியும் கொண்டு வரச் சொன்னார்.

அதைக் கேட்டதும், சீடர்களுக்கு வியப்பு தாங்க முடியவில்லை. என்றாலும், அவர் கேட்டதை எடுத்துக் கொண்டு வந்து தந்தனர். நிஜமாகவே திருமலை பெருமாளுக்கு சிபாரிசு செய்து, குருநாதர் ஓலை எழுதப் போகிறாரா... இல்லை அந்தப் பெண்மணியை சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதற்காக இப்படி ஏதேனும் செய்கிறாரா?’ என்பதைத் தெரிந்து கொள்ள ஆர்வமாகி, ராமானுஜரைச் சுற்றி அமர்ந்து, கவனிக்கலானார்கள்.

மேலே அண்ணாந்து திருமலையைப் பார்த்து இருகரம் கூப்பிவிட்டு, ஓலை நறுக்கில் பெறுநர் முகவரியை எழுதும் இடத்தில் ‘ஶ்ரீ வேங்கடேசப் பெருமாள், திருமலை’ என்று குறிப்பிட்டுவிட்டு, பெண்மணியின் கோரிக்கையை எழுதத் தொடங்கினார் ராமானுஜர். எழுதி முடித்த பின் ஓலையின் கீழே தன் கையெழுத்தையும் போட்டார்.

பின்னே... ஒரு கடிதம் என்றால்,அது எங்கிருந்து வருகிறது என்பதும் முக்கியம் ஆயிற்றே! அதை வைத்துதானே சிபாரிசு மதிப்பிடப்படும்?! அதை அந்தப் பெண்மணியிடம் கொடுத்தார். அப்போது ஓலை நறுக்கில் எழுதப்பட்டிருந்த வாசகங்களை சீடர்களும் படித்துப் பார்த்தனர்.

‘மோர்க்காரிக்கு மோட்சம் கிடைக்க அனுக்ரகம் செய்’ என்பதாக சிபாரிசு செய்து எழுதப்பட்டிருந்தது. ஓலையை வாங்கிய அடுத்த விநாடி அந்தப் பெண்மணி ஆனந்தமாக திருமலையை நோக்கிப் புறப்பட்டாள். மலை ஏறி, பெருமாள் சன்னிதிக்குச் சென்று அங்குள்ள அர்ச்சகர்களிடம் கொடுத்தாள்.

மோர்க்காரப் பெண்மணியை மேலும் கீழும் பார்த்து, இது என்ன ஓலை? என்று குழப்பத்துடன் கேட்டனர் அர்ச்சகர்கள். அவர்களிடம் முழு விவரத்தையும் சொன்னாள் அவள்.

ராமானுஜர் எழுதிக் கொடுத்த ஓலை என்று அறிந்ததும், மறுப்பு ஏதும் சொல்லாமல் அதைக்கொண்டு போய் பெருமாளின் முன்னால் நீட்டினர். எப்பேர்ப்பட்ட ஆச்சார்யர், ராமானுஜர் !

அவருக்கு உண்டான முக்கியத்துவத்தை பெருமாள் கொடுக்காமலா இருப்பார்?! தம் வலக் கையை நீட்டி அதை வாங்கிக் கொண்டார் பெருமாள். விஷயம் அறிந்தார். பிறகு, உனக்கு மோட்சம் தந்தேன் என்று மோர்க்காரியைப் பார்த்துப் பெருமாள் திருவாய் மலர்ந்தார்.

அடுத்த கணம் வானில் இருந்து பிரகாசமாக ஒரு புஷ்பக விமானம் வந்தது. அதில் இருந்து விஷ்ணு தூதர்கள் இறங்கினர். மோர்க்காரியைத் தங்களுடன் ஏற்றிக் கொண்டு வைகுந்தம் புறப்பட்டனர். ராமானுஜர் ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்தால், பெருமாளிடம் எப்பேர்ப்பட்ட கவனிப்பு, பார்த்தீர்களா?

உடையவர், உடையவர் என்று கொண்டாடுவதன் சூட்சுமத்தை உணர்த்துகிற சம்பவமல்லவா இது! தெய்வ பக்தி சாதிக்காததை, குருபக்தி சாதிக்கும்.

# சைவசித்தாந்த சுருக்கம்

*1. சமயம் என்றால் என்ன?*
மனிதன் வாழ்வை வழிப்படுத்துவது சமயம்.

*2. சைவம் என்றால் என்ன?*
சைவம் என்றால் சிவ சம்பந்தமுடையது என்பது பொருள்.

*3. சைவ சமயம் எப்போது தோன்றியது?*
சைவ சமயம் அநாதியானது. அநாதி என்றால் ஆதி அற்றது (தொடக்கமில் காலம் தொட்டு) என்பது பொருள்.

*4. யார் சைவர்?*
சிவபெருமானை முழுமுதற் கடவுள் என உணர்ந்து வழிபடுபவரே சைவர்.

*5. சைவ சமயத்தின் முக்கிய நூல்கள் யாவை?*
பதினான்கு சாத்திரங்களும், பன்னிரண்டு

திருமுறைகளும்.

*6. சமயக் குரவர்கள் யாவர்?*

1. திருஞான சம்பந்த நாயனார்
2. திருநாவுக்கரசு நாயனார்
3. சுந்தரமூர்த்தி நாயனார்
4. மாணிக்கவாசகர்

*7. அகச்சந்தானக் குரவர்கள் யாவர்?*

1. திருநந்தி தேவர்
2. சனற் குமாரமுனிவர்
3. சத்திய ஞான தரிசினிகள்
4. பரஞ்சோதி முனிகள்

*8. புறச்சந்தானக் குரவர்கள் யாவர்?*

1. ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார்
2. அருள்நந்தி சிவாச்சாரியார்
3. மறைஞான சம்பந்தர் சுவாமிகள்
4. உமாபதி சிவாச்சாரியார்

*9. திருமுறை மற்றும் சாத்திரங்களின் அமைப்பு எவ்வாறு உள்ளது?*

திருமுறைகள் சிவபெருமானின் பெருமைகளை விளக்கும் புகழ் நூல்களாக்

அமைந்திருக்கின்றன.
சாத்திரங்கள் சைவ சமயத்தின் கொள்கைகளை விளக்கும் பொருள் நூல்களாக அமைந்துள்ளன.

*10. திருமுறை என்ற சொல்லுக்குப் பொருள் யாது?*

முறை என்னும் சொல் நூல் என்னும் பொருளை உடையது. திருமுறை என்பது மாறாத செல்வத்தை மக்கள் எளிதாகப் பெறுவதற்கு வழிகாட்டும் நூல் என்பது பொருள்.
இந்நூல் 12 பகுதிகளாக தொகுக்கப் பெற்று பன்னிரு திருமுறை என்று போற்றப்படுகிறது.

*11. திருமுறைகள் பிரணவத்துள் அடங்கும் என்பதை விளக்குக?*

பன்னிரு திருமுறையில் முதல் பாடல் 'தோடு' என்னும் சொல்லுடன் தொடங்கி, இறுதிப் பாடலில் 'உலகெலாம்' என்ற சொல்லுடன் முடிகிறது. தோடு என்பதில் முதல் எழுத்து ஓ உலகெலாம் என்பதில் ஈற்றெழுத்து ம் ஆகும்.

*12. திருமுறைகளை முறையாக

வகைப்படுத்தியவர் யாவர்?*
திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசைகள் செய்து அவரிடம் நேரடியாக உபதேசம் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள்.
இராசராச சோழர் காலத்தில் பொல்லாப் பிள்ளையார் அருளினால் நம்பியாண்டார் நம்பிகள், மறைத்து வைக்கப்பட்டிருந்த தேவாரங்களை எடுத்து தொகுத்து அருளினார்கள்.

*13. திருமுகப் பாசுரம் யார் அருளிச் செய்தது?*
திருமுகப்பாசுரம் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டது. இப்பகுதி பதினொராம் திருமுறையில் அமைந்திருக்கிறது.

*14. பஞ்சபுராணம் குறிப்பு தருக.*
மூவர் தேவாரங்களில் ஒரு பாடலும், திருவாசகத்தில் ஒரு பாடலும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு மற்றும் பெரியபுராணத்தில் இருந்து ஒவ்வொரு பாடலுமாக மொத்தம் ஐந்து பாடல்கள் பாடுவது பஞ்சபுராணம் எனப்படும்.

*15. அகத்தியர் தேவாரத் திரட்டு - குறிப்பு தருக*

அகத்திய முனிவர் 'அடங்கள் முறை' முழுவதையும் சிவாலய முனிவருக்கு உபதேசித்து. அவற்றில் இருந்து 25 பதிகங்களை திரட்டி ஒரு நூலாக செய்து அருளினார். அந்நூலே அகத்தியர் தேவாரத் திரட்டு ஆகும். இதில் 8 நிலைகள் உள்ளன.

1. குருவருள்
2. பரையின் வடிவம்
3. அஞ்செழுத்து
4. கோயில் திறம்
5. சிவன் உருவம்
6. திருவடிகள் பெருமை
7. அருச்சனைச் சிறப்பு
8. அடிமைத் திறம்

*16. தேவார அருள்முறைத் திரட்டு -குறிப்பு தருக.*

மூவர் பெருமக்கள் அருளிச் செய்த தேவாரங்களை திருவருட்பயன் என்னும் சாத்திர நூலில் வரும் பத்து தலைப்புகளில் உமாபதிசிவம் ஒரு நூல் அருளியுள்ளார்.

அந்நூலுக்கு தேவார அருள்முறைத் திரட்டு என்று பெயர். அந்நூலில் 99 தேவாரப் பாடல்கள் உள்ளன.

*17. பன்னிரு திருமுறைகளில் மொத்தம் எத்தனை பாடல்கள்?*

18,497 பாடல்கள்.

*19. நால்வர் பெருமக்களின் அவதாரத் தலங்கள் எவை?*

திருஞான சம்பந்த சுவாமிகள் - சீர்காழி
திருநாவுக்கரசு சுவாமிகள் - திருவாமூர்
சுந்தரமூர்த்தி சுவாமிகள் - திருநாவலூர்
மாணிக்கவாசகர் - திருவாதவூர்

*20. நால்வர் பெருமக்கள் இப்பூவுலகில் வாழ்ந்த காலம் எவ்வளவு?*

திருஞான சம்பந்த சுவாமிகள் - 16 ஆண்டுகள்
திருநாவுக்கரசு சுவாமிகள் - 81 ஆண்டுகள்
சுந்தரமூர்த்தி சுவாமிகள் - 18 ஆண்டுகள்
மாணிக்கவாசகர் - 32 ஆண்டுகள்

*21. திருத்தொண்டர் தொகை ஆசிரியர் யார்?*

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

*22. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்?*
அறுபத்து மூவர்.

*23. சாத்திரத்தில் தோத்திரம், தோத்திரத்தில் சாத்திரம் என்று கூறப்படும் நூல்கள் எவை?*
சாத்திரத்தில் தோத்திரம் - போற்றிப் ப·றொடை
தோத்திரத்தில் சாத்திரம் - திருமந்திரம்

*24. மெய்கண்டாருக்கு உபதேசம் செய்தது யார்?*
பரஞ்சோதி முனிகள்

*25. மெய்கண்டாரின் மாணாக்கர்கள் எத்தனை பேர்?*
49 பேர். அதில் தலையாய மாணவராக விளங்கியவர் சகல ஆகம பண்டிதர் என்று அழைக்கப்படும் அருள்நந்தி சிவாச்சாரியார். 'துகளறுபோதம்' என்ற நூலை அருளிச் செய்த சிற்றம்பல நாடிகளும் இவர் மாணாக்கரே.

*26. சிவஞான போதத்திற்கு காலத்தால் முற்பட்ட சாத்திர நூல்கள் யாவை?*

திருவுந்தியார் மற்றும் திருக்களிற்றுப்படியார்.

*27. அருள்நந்தி சிவம் அருளிச் செய்த நூல்கள் யாவை?*

1. சிவஞான சித்தியார்
2. இருபா இருப·து

*28. சித்தாந்த அட்டகம் - விளக்குக*

பதினான்கு சாத்திரங்களில் உமாபதிசிவம் அருளிச் செய்த நூல்கள். மொத்தம் எட்டு. அந்த எட்டு நூல்களே சித்தாந்த அட்டகம் என வழங்கப்படுகிறது.

1. சிவப்பிரகாசம்
2. திருவருட்பயன்
3. உண்மை நெறி விளக்கம்
4. போற்றிப் ப·றொடை
5. கொடிக்கவி
6. வினா வெண்பா
7. சங்கற்பநிராகரணம்
8. நெஞ்சு விடுதூது

என்பவையே அந்த எட்டு நூல்கள்.

*29. ஞானாமிர்தம் என்ற நூலின் ஆசிரியர் யார்?*

வாகீச முனிவர்

*31. ஆகமங்கள் - குறிப்பு தருக.*

ஆகமங்கள் சிவபிரானால் சிறப்பாக சைவர்களுக்கு அருளிச் செய்யப்பட்டன. சிவ ஆகமங்கள் 28 உள்ளன. சைவசமயம் வேதத்தைப் பொது எனவும், ஆகமத்தை சிறப்பு எனவும் கருதுகிறது.

*32. சமயங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?*

அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறபுறச்சமயம் என நான்கு வகைப்படும்.

அகச்சமயம் அகப்புறச்சமயம்

1. பாடாணவாத சைவம் 1. பாசுபதம்

2. பேதவாத சைவம் 2. மாவிரதம்

3. சிவசமவாத சைவம் 3. காபாலம்

4. சிவசங்கிராந்தவாத சைவம் 4. வாமம்

5. ஈசுவர அவிகாரவாத சைவம் 5. பைரவம்

6. சிவாத்துவித சைவம் 6. ஐக்கியவாத சைவம்

புறச்சமயம் புறப்புறச்சமயம்

1. நியாயம் 1. உலகாயதர்

2. சாங்கியம் 2. சமணர்

3. யோகம் 3. சௌத்திராந்திகர்

4. மீமாஞ்சை 4. யோகசாரர்

5. வேதாந்தம் 5. மாத்யமிகர்

6. பாஞ்சராத்திரம் 6. வைபாடிகர்

*33. சைவசித்தாந்தம் - ஒரு வார்த்தையில் விளக்கம் தருக.*

முடிந்த முடிபு.

*34. சைவ சித்தாந்தர் என்ற குறிப்பினைத்தரும் திருமுறை எது?*

திருமந்திரம்

"கற்பனைக் கற்று கலைமன்னும் மெய்யோகம்
முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே
சொற்பதங் கடந்து துரிசற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவசித்தாந்தரே"

*35. சைவ சித்தாந்த தத்துவத்தின் சிறப்பு யாது?*

1. தர்க்க ரீதியானது (Logic)
2. அறிவியற் பூர்வமானது (Scientific)
3. வரலாற்றுத் தொன்மையுடையது (Historic)
4. நடைமுறைக்கு இயைந்தது (Easy to Adapt)

5. உலகளாவியது (Universal)

6. முற்போக்குச் சிந்தனைகளை உடையது (Optimistic)

இன்னும் பல.

*36. சற்காரிய வாதம் - சிறுகுறிப்பு தருக.*

'உள்ளது அழியாது, இல்லது தோன்றாது' என்ற விஞ்ஞான அடிப்படையில் தான் சைவசித்தாந்த தத்துவம் தனது கொள்கைகளை நிலைநிறுத்துகிறது.

*37. அளவை - குறிப்பு தருக.*

நீட்டல் அளவை, நிறுத்தல் அளவை போல உலகப் பொருள்களை அளப்பதற்கு பலவிதமான அளவை முறைகள் இருப்பவை போல சமய உலகிலும் பல அளவைகள் பேசப்படுகின்றன. குறிப்பாக மூன்று அளவைகள்.

1. காட்சி அளவை - (பிரத்தியட்சப் பிராமணம்)
2. கருதல் அளவை - (அனுமானப் பிராமணம்)
3. உரை அளவை - (ஆகமப் பிராமணம்)

மேலும் பல அளவை முறைகள் இருப்பினும் பொதுவாக அவைஎல்லாம் மேற்சொன்ன மூன்றில் அடங்கும்.

*38. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் யாவை?*

1. இறைவன் - பதி
2. உயிர் - பசு
3. மலம் - பாசம்

இம்மூன்று பொருள்களுக்கும் உரிய தொடர்பினை கீழ்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு, பாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகா பசு பாசம்
பதி அணுகிற் பசு பாசம் நில்லாவே"

*39. முப்பொருள்களும் அறிவுடைப் பொருள்களா?*

இறைவன் - தாமே அறியும் பேரறிவு உடையவன்.
உயிர்கள் - அறிவிக்க அறியும் சிற்றறிவு உடையவன்.
மலங்கள் - அறிவித்தாலும் அறியாத சடப்பொருள்கள்.

*40. பொருள்களின் இரண்டு இயல்புகள்

யாவை?*

பொருள்களுக்கு பொது இயல்பு, சிறப்பு இயல்பு என இரண்டு இயல்புகள் உண்டு.

பொது இயல்பு

ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளின் சார்பால் உண்டாகி, அச்சார்பு நீங்கிவிடும் போது நீங்கி விடும் இயல்பு.

(எ.கா) நீரில் வெம்மை

சிறப்பு இயல்பு

ஒரு பொருளுக்கு எச்சார்ப்புமின்றி இயற்கையாகவே அமைந்திருக்கும் இயல்பு.

(எ.கா) நீரின் குளிர்ச்சி

*41. இறைவன் செய்யும் ஐந்தொழில்கள் யாவை?*

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

*42. மும்மூர்த்திகள் யாவர்?*

படைத்தல் தொழிலைச் செய்யும் - பிரமன்

காத்தல் தொழிலைச் செய்யும் - திருமால்

அழித்தல் தொழிலைச் செய்யும் - உருத்திரன்

இவர்களே மும்மூர்த்திகள்.

இம்மும்மூர்த்திகளின் மேம்பட்டவர் சிவபெருமான். இவர்கள் சிவபெருமான் அருளினால் இந்தத் தொழிலைச் செய்யும் உருத்திரன் குணிஉருத்திரன். சிவபெருமான் மகாஉருத்திரன். இவ்வேறுபாட்டினை சிவஞான மாபாடியத்தில் சிவஞான சுவாமிகள் தெளிவாக விளக்குகிறார்கள

*43. இறைவனின் எண்குணங்கள் யாவை?*

1. தன் வயம் உடைமை.
2. தூய உடம்பு உடைமை.
3. இயற்கை உணர்வு உடைமை.
4. முற்றுணர்வு உடைமை.
5. இயல்பாகவே பாசமின்மை.
6. பேரருள் உடைமை.
7. முடிவில் ஆற்றல் உடைமை.
8. வரம்பில் இன்பம் உடைமை.

*44. உயிர்களைத் தோற்றுவித்தவர் யார்?*

உயிர்களை யாரும் தோற்றுவிக்கவில்லை. அவை தோற்றமில் காலந்தொட்டே இருப்பவை என்று சைவசித்தாந்தம் தெளிவாக விளக்குகிறது.

*45. உயிர்கள் எத்தனை வகைப்படும்?*
ஆணவமலம் மட்டும் உடைய விஞ்ஞான கலர், ஆணவம் மற்றும் கன்ம மலம் உடைய பிரளயா கலர், ஆணவம், கன்மம் மற்றும் மாயை என்ற மூன்று மலங்களும் உடைய சகலர் என உயிர்கள் மூவகைப்படும்.

*46. கேவலம், சகலம், சுத்தம் - குறிப்பு தருக.*
கேவலம்:
உயிர்கள் தம்மையும் அறியாமல், தமக்கு மேலே இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதையும் அறியாமல், தன்னை ஆணவம் என்ற மலம் முழுமையாக மறைத்திருக்கின்றது என்பதை அறியாத உயிரின் நிலை.
சகலம்:
கேவலநிலையில் இருந்த உயிர்களுக்கு மாயை மற்றும் கன்மத் தொடர்பினால் அறியாமை சிறிது குறைந்த நிலை.
சுத்தம்:
உயிர்கள், பாச நீக்கம் பெற்று இறைவனின் திருவடிகளை அடைந்து பேரானந்தத்தை அனுபவிக்கும் நிலை.

*47. உயிர்கள் அனுபவிக்கும் ஐந்து நிலைகள்(ஐந்தவத்தை) யாவை?*

1. நனவு - சாக்ரம்
2. கனவு - சொப்னம்
3. உறக்கம் - கழுத்தி
4. பேருறக்கம் - துரியம்
5. உயிர்ப்பு அடங்கல் - துரியாதீதம்

*48. மலங்கள் எத்தனை வகை? அவை யாவை?*

ஆணவம், கன்மம், மாயை என்று மூன்று வகைப்படும். மாயேயம், திரோதாயி என்று இரண்டையும் சேர்த்து மலங்கள் ஐந்து என்றும் விரித்துச் சொல்வார்கள்.

*49. ஆணவ மலத்தின் வேறு பெயர்கள் யாவை?*

இருள்மலம், மூலமலம், சகசமலம் என்று எல்லாம் ஆணவமலம் நூல்களில் பேசப்படுகின்றன. சாத்திர நூல்களில் 'இருள்' என்ற சொல்லால் பேசப்படும்.

*50. கன்ம மலத்தின் காரியங்கள் யாவை?*

சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம் என மூன்றாகும்.

சஞ்சிதம்: (பழவினை)
பலபிறவிகளில் சேர்த்த வினைக்குவியல்

பிரார்த்தம்: (நுகர்வினை)
இப்பிறவியில் அனுபவிப்பதற்காக இறைவனால் நமக்குத் தரப்பட்ட வினைகள் (நம்மால் முன்செய்த வினைகளின் ஒரு பகுதி)

ஆகாமியம்: (வருவினை)
இப்பிறவியில் நாம் புதிதாக செய்யும் வினைகள்.

*51. வினை என்றால் என்ன?*
நாம் செய்யும் செயல்களே வினை எனப்படும். வினைகள் நல்வினை, தீவினை என இரண்டு வகைப்படும்.

*52. இன்ப துன்பத்திற்கான காரணம் என்ன?*
முந்தைய பிறவிகளில் நாம் செய்த செயல்களுக்குத் தகுந்தவாறு பலன்களை இப்பிறவியில் அனுபவிக்கின்றோம். இறைவன் பெருங்கருணையின் காரணமாக

நாம் செய்துள்ள மொத்த வினைகளையும் ஒரே பிறவியில் அனுபவிக்கத் தருவதில்லை. இப்பிறவியில் அனுபவிப்பதற்கு எனக் கொடுக்கப்பட்ட பிரார்த்த வினையின் வழி இப்பிறவியில் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றோம். நாம் அனுபவிக்கும் இன்பதுன்பத்திற்குக் காரணம் நாம் முன்பு செய்த செயல்கள் தான் என சைவ சித்தாந்தம் தெளிவாக விளக்குகிறது.

*53. வினைக்குத் தகுந்தவாறு பலன்களை யார் நமக்குத் தருகிறார்கள்?*

வினைக்குத் தகுந்த பலன்களை வினைகளின் காரணமாகிய கன்மம் தர முடியாது. ஏனென்றால் அது சடப்பொருள். உயிர் தாமே சென்று வினைகளுக்குத் தகுந்த பலன்களை நுகர்வதில்லை. இறைவனே அந்த அந்த உயிர்கள் செய்த வினைக்குத் தகுந்த பலன்களைக் கூட்டி வைக்கிறான்.

*54. நாம் வாழும் இவ்வுலகைத் தோற்றுவித்தவர் யார்?*

மாயை என்னும் மலத்திலிருந்து உயிர்கள்

நன்மை பெறும் பொருட்டு இறைவன் உலகத்தைப் படைத்தார்.

*55. மாயை - குறிப்பு தருக.*
மாயை என்பது மும்மலங்களில் ஒன்று. இம்மாயையின் காரியங்கள் 36 தத்துவங்களாக் விளங்குகின்றன. இம்மாயை சுத்தமாயை, அசுத்தமாயை என இரண்டு பகுதிகளாக நிற்கும். பிரகிருதி மாயை என்பது அசுத்தமாயைக்குள் அடங்கி நிற்கும். சுத்தமாயை, அசுத்தமாயை மற்றும் பிரகிருதி மாயை என மூன்றாகவும் கொள்வர். நாம் வாழும் இவ்வுலகம் பிரகிருதி மாயையில் இருந்து தோற்றுவிக்கப்பட்டது.

*56. சைவ சித்தாந்த சாத்திரங்களில் மணிமுடி நூலாக விளங்குவது எது?*
சிவஞான போதம். சிவஞான சித்தியார் இதனுடைய வழிநூல் எனவும், சிவப்பிரகாசம் இதனுடைய சார்பு நூல் எனவும் போற்றப்படும்.

*57. கடவுளுக்கும், உயிருக்கும் உள்ள தொடர்பு சைவ நூல்களில் எவ்வாறு

சொல்லப்படுகிறது?*
'அத்துவிதம்' என்ற சொல்லினால் குறிக்கிறார்கள்.

*58. சைவ சித்தாந்தம் காட்டும் அத்துவிதம் யாது?*
இறைவன் ஒன்றாய், வேறாய் மற்றும் உடனாய் உயிர்களோடு கலந்து இருக்கின்றான். அந்தந்தப் பொருளுக்கு அந்தந்த பொருளாய் - அதுஅதுவாய் நிற்பதுவே ஒன்றாய் நிற்றல் ஆகும். இறைவன் உயிர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு உயிர்களின் வேறாய் நிற்கின்றான். உயிர்கள் தாம் விரும்பியவற்றை செய்வதற்கு இறைவனுடைய துணை தேவைப்படுகிறது. எனவே, உயிர்களோடு உடனாய் கூடி நிற்கின்றான்.

*59. சைவ சமயம் கூறும் வழிபாட்டு முறைகள் யாவை?*
குரு, லிங்க, சங்கம, வழிபாடு.
குரு வழிபாடு: நம்மிடம் உள்ள அறியாமையைப் போக்கும் ஞான

ஆசிரியரையே சிவமாகவே கருதி வழிபடுவதாகும்.
லிங்க வழிபாடு: திருக்கோயிலுக்குச் சென்று சிவபெருமானை லிங்க திருமேனியில் வழிபடுதல்.
சங்கம வழிபாடு: சிவனடியார்களை சிவமாகவே கருதி வழிபடுவது.

*60. சரியை, கிரியை, யோகம், ஞானம் - விளக்குக*

சரியை: உடலால் வழிபடுவது.
கிரியை: உடலாலும், உள்ளத்தாலும் வழிபடுவது.
யோகம்: உள்ளத்தால் வழிபடுவது.
ஞானம்: எங்கும் எதிலும் இறையருளையே காண்பது.

*61. திருவைந்தெழுத்து விளக்கம் தருக.*

திருவைந்தெழுத்து என்பது சிவாயநம என்னும் மந்திரமாகும்.
சி-சிவன்
வ-சக்தி(அருள்)
ய-உயிர்

ந-மறைப் பாற்றல்
ம-ஆணவ மலம்
என்று ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறித்து நிற்கிறது.
திருவைந்தெழுத்து மூவகைப்படும்.
நமசிவாய, சிவாய நம, சிவயசிவ என்பவை.
இம்மந்திரமே பஞ்சாட்சர மந்திரம் என்று கூறப்படும்.

*62. தீக்கை என்றால் என்ன?*
தீக்கை என்பது தீட்சை என்னும் வடமொழி சொல்லின் திரிபு ஆகும்.
தீ-கெடுத்தல் க்ஷை-கொடுத்தல்
பாசப்பற்றைக் கெடுத்து மோட்சத்தை கொடுப்பது தீட்சை எனப்படும்.
இது மூன்று வகைப்படும் அவை
1. சமயம் 2. விசேடம் 3. நிருவாணம்

*63. இருவினை ஒப்பு என்றால் என்ன?*
நல்வினையின் பயனாகிய இன்பத்தில் விருப்பும், தீவினையின் பயனாகிய துன்பத்தில் வெறுப்பும் கொள்ளாது.
அவற்றால் உள்ளம் வேறுபடாது,

இரண்டையும் ஒன்றுபோல் கருதி அவற்றின்மேல் பற்று இல்லாமல் நிற்கும் நிலையே இருவினை ஒப்பு எனப்படும்.

*64. மலபரிபாகம் என்றால் என்ன?*

கணக்கற்ற பிறவிகளில் ஆணவமலத்தின் சக்தி உயிர் அறிவை தடைப்படுத்தியும் திரிபுபடுத்தியும் செயல்படுவதால் படிப்படியே மெலிவடைந்து பின் மறைத்தலை செய்யமாட்டாத நிலையை அடையும். உயிர் அறிவை தடுத்து வைத்திருந்த அதன் பிணிப்பு நெகிழ்ந்து நீங்கும் நிலை அடையும். இந்நிலையே மலபரிபாகம் எனப்படும்.

*65. சத்திநிபாதம் என்றால் என்ன?*

மலரிபாகம் சிறிது, சிறிதாக நிகழ, நிகழ அதற்கு ஏற்ப இதுகாறும் உயிரில் மறைத்து இருந்து பக்குவப்படுத்தி வந்த இறைவனது திரோதான சக்தியும் சிறிது, சிறிதாக தன் தன்மை மாறி அருள் சக்தியாக உயிரின் கண் விளங்கித் தோன்றும். அந்நிகழ்ச்சியே சத்திநிபாதம் எனப்படும்.

*66. சத்திநிபாதத்தின் வகைகள் யாவை?*

மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும்.

*67. முத்தி என்றால் என்ன?*
ஒவ்வொரு சமயமும் அதன் வழிபடு தெய்வம், வழிபாட்டு முறைகள் மற்றும் அடிப்படை நூல்கள் போன்ற சில அடிப்படைக் கருத்துக்களை சொல்கிறார்கள். அவற்றில் இன்ப, துன்பங்களை அனுபவிக்கும் உயிரின் முடிவான நிலை முக்தி என்று சொல்லப்படுகிறது.

*68. சைவ சித்தாந்தம் காட்டும் முக்தி யாது?*
உயிர்கள், மலநீக்கம் பெற்று இறைவனுடைய திருவடிகளில் ஒன்றாய் கலந்து பேரானந்தத்தை அனுபவித்தல். இந்நிலைக்கு சிவமாம் தன்மை என்று பெயர். சிவமாம் தன்மை என்று சொன்னாலும் சிவனோடு சமமாய் நிற்றல் என்பது பொருள் அல்ல. இறைவன் திருவடியில் என்றும் பேரானந்தத்தை மட்டுமே அனுபவித்துக் கொண்டு இருக்கும். முக்தி பெற்ற உயிர்கள் மீண்டும் பிறவிக்கு வருவதில்லை.

*69. சீவன் முக்தர் - குறிப்பு தருக.*

முக்தி பெற்றும் இவ்வுடலோடு இவ்வுலகில் வாழும் ஆன்மாக்களுக்கு சீவன் முக்தர்கள் என்று பெயர்.

*70. தசகாரியம் என்றால் என்ன?*

ஞான சாதனையில் முன்னேறும் ஆன்மாக்களிடத்து நிகழும் பத்து வகை செயல்பாடுகளாகும்.

1.தத்துவரூபம்; 2.தத்துவ தரிசனம்
3.தத்துவ சுத்தி, 4.ஆன்ம ரூபம்
5.ஆன்ம தரிசனம், 6.ஆன்ம சுத்தி
7.சிவ ரூபம், 8.சிவ தரிசனம்
9.சிவயோகம், 10.சிவபோகம்

*திருச்சிற்றம்பலம்*

# ஒரு காதல் காவியம் [சிறுகதை]

- By B.R. மகாதேவன்

( நன்றி: http://www.tamilhindu.com/ )

நாயக்கன்கொட்டாயைச் சேர்ந்த பறையர் குலத்தைச் சேர்ந்த திவ்யா என்ற பெண்ணுக்கும் சக்கிலியர் குலத்தைச் சேர்ந்த இளவரசன் என்ற பையனுக்கும் இடையில் காதல் மலர்கிறது. விஷயம் தெரிந்ததும் பறையர் குலத்தினர் ஆத்திரம் கொள்கிறார்கள்.

நாங்க எங்க புள்ளைங்களுக்கு பாலும் பழமும் கொடுத்து கண்ணுக்குள்ள வெச்சுப் பாத்துக்கறோம்… நீங்க என்னடானா ஒன்றரையணா கூலிங் கிளாஸும் துவைக்காத ஜீன்ஸும் போட்டுக்கிட்டு நாடகக் காதலாடா பண்றீங்க என்று கொதிக்கிறார்கள்.

எங்க கிட்ட சரக்கு இருக்கு…மிடுக்கு இருக்கு… உங்க பொண்ணுங்கள உங்களால திருப்திப்படுத்த முடியலை. தான் எங்க கிட்ட வர்றாங்க என்று

சக்கிலியர் தலைவர் ஒருவர் பேசுகிறார். இதைக் கேட்டதும் ரவிக்குமார் தலைமையில் ஒரு கும்பல் கிளம்பி இளவரசனைக் கொல்லத் திட்டமிடுகிறார்கள்.

இளவரசன் அவர்களிடமிருந்து தப்பித்து பாளையங்கோட்டைக்குப் போய்விடுகிறான். பறையர் குலப் பெண்ணுக்கு வேறொருவருடன் திருமணம் நிச்சயிக்கிறார்கள். திருமணத்துக்கு முந்தின நாள் இரவில் அந்தப் பெண் தன் தோழியின் உதவியுடன் ஆம்பூருக்குத் தப்பிச் சென்றுவிடுகிறாள்.

சில வாரங்கள் கழிகின்றன. காதலன் போன் செய்து காதலியை பாளையங்கோட்டைக்கு வரச் சொல்கிறான். என்ன விஷயம் என்று கேட்கிறாள். உனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருக்கிறது. சீக்கிரம் வா என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிடுகிறான்.

பாளையங்கோட்டைக்கு வந்த காதலியைப் பார்த்ததும் இன்ப அதிர்ச்சி கொடுக்க நினைத்த காதலனுக்கு வேறொரு அதிர்ச்சி ஏற்படுகிறது.

காரில் இருந்து அமீர் இறங்குகிறார். பின்னால் திவ்யா பர்தா அணிந்தபடி இறங்குகிறார். காதலியின் தோழி அமீரின் உறவினர்.

இந்து மதம் உலகத்திலேயே மோசமானது. இஸ்லாம்தான் அதி உன்னதமான மதம். அமைதி மார்க்கம் அது. யாரையும் ஜாதிபார்த்து ஒதுக்காது. திவ்யாவும் இளவரசனும் இருவரும் இஸ்லாமுக்கு மதம் மாறித் திருமணம் செய்துகொண்டால் யாரும் எதிர்க்க முடியாது என்று சொல்லி அவளை இஸ்லாமுக்கு மாற்றியிருக்கிறார்.

திவ்யாவும், இளவரசனைப் பார்த்து, 'நீங்களும் இஸ்லாமுக்கு மாறிவிடுங்கள். நம்மை அங்கு யாரும் பிரிக்க முடியாது' என்று சொல்கிறாள்.

இளவரசனோ தடுமாறுகிறான். என்ன விஷயமென்றால் பாளையங்கோட்டையில் இருந்த அவனது நண்பர்கள் ஜெகத் கஸ்பருக்கு உறவினர்கள். அவர் இதே யோசனையைச் சொல்லி அவனை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றியிருக்கிறார்.

உலகிலேயே உன்னதமான மதம் கிறிஸ்தவம் தான். அன்பே உருவான மார்க்கம். சனாதன பிராமண இந்து மதம் மிக மிக மோசமானது. மலச்சிக்கல்

முதல் திருமணச் சிக்கல் வரை அனைத்துக்குமான ஒரே தீர்வு கிறீஸ்தவத்துக்கு மாறுவதுதான் என்று சொல்லி இளவரசனை சார்லஸாக ஆக்கியிருப்பார். பறையருக்கும் சக்கிலியருக்கும் இடையிலான சண்டை கிறிஸ்தவருக்கும் இஸ்லாமியருக்கும் இடையிலானதாக மாறுகிறது.

ஜெகத் கஸ்பர் மென்மையாக அமீரைப் பார்த்துச் சொல்கிறார்: கணவன் எந்த மதத்துல இருக்காரோ அந்த மதத்துக்குத்தான் மனைவியும் வரணும். அதனால திவ்யாவை தெரேசான்னு பெயர் மாத்தி நாங்க ரட்சிக்கறோம். சார்லஸ்-தெரேசா என்ற இந்த தம்பதியை ஆசீர்வதியுங்கள் அமீர் பாய். கல்யாணத்துக்கு மட்டன் பிரியாணி காண்ட்ரக்ட் கூட நீங்களே எடுத்துக்கோங்க. ஆனா விட்ல வளர்க்கற ஆடு மட்டும் வேண்டாம் என்று தோளில் கை போட்டபடியே சொல்கிறார்.

அது தோளில் வேடிக்கையாக, அன்பாகப் போடப்பட்ட கை அல்ல; கழுத்தை நெரிக்கும் கை

என்பது அமீருக்குப் புரியவருகிறது. சட்டென்று அந்தக் கையைத் தட்டிவிடுகிறார்.

அதெல்லாம் வேண்டாம்; திவ்யா இஸ்லாமுக்கு மாறியாச்சு. அதனால குலாம் முஹம்மதுவை எங்க கிட்ட ஒப்படைங்க என்கிறார்.

இந்து மதத்துலதான் மேல் ஜாதி கீழ் ஜாதின்னு மட்டுமில்லாம மேல் ஜாதிகளுக்குள்ளேயும் கீழ் ஜாதிகளுக்குள்ளேயும்கூட பொண்ணு கொடுத்து பொண்ணு எடுக்கறதில்லை. நாமெல்லாம் தமிழர்கள்தான. தமிழ் கிறிஸ்தவரும் தமிழ் முஸ்லீமும் கண்ணாலம் கட்டிக்கிட்டா என்ன என்று இளவரசன் ஜெகத் கஸ்பரிடம் கேட்கிறான்.

தம்பி ஓரமாப் போய் நில்லு என்று அவனை தள்ளிவிடுகிறார்.

இஸ்லாத்துல எந்த ஒடுக்குமுறையும் கிடையாதுன்னு சொன்னீங்களே. கிறிஸ்தவரானாலும் அவரை ஏத்துக்கலாமே என்று அமீரிடம் திவ்யா என்ற ஃபாத்திமா கேட்கிறாள். அவர் திவ்யாவின் காதருகில் குனிந்து, ’மூடிட்டுப் போடி’ என்று சிரித்தபடியே சொல்கிறார்.

அமீர் தரப்புக்கும் ஜெகத் கஸ்பர் தரப்புக்கும் இடையில் பேச்சு வார்த்தையில் மெள்ள குரல் உயர்கிறது. தடித்த பிரயோகங்கள் வருகின்றன. ஃப்ளோல கெட்ட வார்த்தைகளும் வருகின்றன. அமைதி மார்க்கமும் அன்பு மார்க்கமும் அங்கிகளைக் கழட்டிப் போட்டு தெருவில் புரள ஆரம்பிக்கின்றன. பேச்சு பேச்சா இருக்கணும் என்று எத்தனையோ தடவை சொன்ன பிறகும் யாரும் கேட்காமல் துப்பாக்கிகள், வெடி குண்டுகள் என வீசப்படுகின்றன.

இளவரசனும் திவ்யாவும் இவர்களிடமிருந்து தப்பித்து ஓடுகிறார்கள்.

ஜெகத் கஸ்பரும் அமீரும் அவர்கள் ஓடுவதைப் பார்த்ததும், உங்களுக்காக நாங்க களமாடிக் கொண்டிருக்கிறோம். நீங்க தப்பிச்சு ஓடறீங்களா என்று அவர்களைத் துரத்துகிறார்கள். இங்குமங்கும் ஓடியவர்கள் ஒரு முட்டுச் சந்தில் மாட்டிக் கொள்கிறார்கள்.

கஸ்பரும் அமீரும் வாருங்கள்… எங்கள் பக்கம் வந்துவிடுங்கள் என்று துப்பாக்கியால் குறிவைத்து அழைக்கிறார்கள். அமீர் பக்கம் போனால்

ஜெகத் கஸ்பர் கையில் இருக்கும் இதாலியன் மேக் துப்பாக்கி வெடிக்கும். ஜெகத் கஸ்பர் பக்கம் போனால் அமீர் கையில் இருக்கும் ஐ.எஸ். துப்பாக்கி வெடிக்கும். இரண்டு துப்பாக்கிகளின் கூட்டல் புள்ளியின் மையத்தில் சிக்கிய இளவரசனும் திவ்யாவும் ஒடுங்கியபடியே ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக்கொள்கிறார்கள். கண்ணை மூடிக் கொண்டு இருவரும் ஒன்றாக உயிரை விடத் தயாராகும்போது ஒரு வேல் கம்பு அவர்கள் முன்னால் சர்ர்ரென்று பாய்ந்து வந்து நிலத்தில் குத்தி நிற்கிறது.

அதைப் பார்த்ததும் கஸ்பரும் அமீரும் ஒரு அடி பின்னால் செல்வார்கள். வேறொரு ஈட்டி சர்ரென்று பின்னால் வந்து பாயும். இடது பக்கம் நகர முயற்சி செய்வார்கள். அங்கும் ஒரு வேல் கம்பு வந்து விழும். வலது பக்கம் நகரப் பார்ப்பார்கள் அங்கும் இன்னொரு வேல் கம்பு வந்து விழும்.

இளவரசன் அவன் முன்னால் விழுந்த வேல் கம்பை எடுத்து தரையில் ஊன்றி நிற்பான். கஸ்பரும் அமீரும் வேல்களால் சிறைப்படுத்தப்பட்டு பயந்துபோய் நிற்பார்கள். தூரத்தில் புலிக் கொடி

பறக்க சீமான் காளையில் புழுதி பறக்க ஸ்லோமோஷனில் பாய்ந்து வருவார்.

இளவரசனையும் திவ்யாவையும் பார்த்து என் பக்கம் வாங்க என்று அழைப்பார். அந்தக் குரலில் அன்பும் ஆறுதலும் பொங்கிப் பிரவகிக்கும். தன்னுடன் கொண்டு வந்த இன்னொரு காளை மீது அவர்களை ஏறிக் கொள்ளச் சொல்வார்.

நாம் தமிழர்கள்… நம்மை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது. இந்துத்துவம் எக்காலத்திலும் இங்கு காலூன்ற முடியாது. தாமரை இங்கு மலரவே மலராது என்று முஷ்டியை மூடிக் கொண்டு கையை வீராவேசத்துடன் உயர்த்துவார்.

திவ்யாவும் இளவரசனும் இங்கே இந்துத்துவம் எங்கே வந்தது என்று முழித்தபடியே அவரைப் பார்ப்பார்கள்.

வேல் சிறைக்குள் மாட்டிக்கொண்ட கஸ்பரும் அமீரும், அழைச்சிட்டுப் போங்க… அழைச்சிட்டுப் போங்க என்று செபாஸ்டியனைப் பார்த்து பவ்யமாகக் கை காட்டுவார்கள்.

தூரத்தில் தெரியுது பார் ஒரு மலைக்கோவில். அங்கு போவோம். உங்கள் திருமணம் அங்கு நடக்கும் என்று சொல்லியபடியே வழிகாட்டிச் செல்வார் சீமான்.

இளவரசனும் திவ்யாவும் தாலி, மஞ்சள் குங்குமம், விபூதி, பட்டு வேஷ்டி, புடவை, நாகஸ்வரம், மேளம், மங்கலப் பறை, காப்புக் கயிறு, மாவிலை என திருமணத்துக்குத் தேவையான எல்லாவற்றையும் சேகரித்துக்கொள்வார்கள்.

சீமானுடைய காளை பல திருப்பங்கள் வழியாகச் சென்று இறுதியில் மலையடிவாரப் பாதையை வந்தடையும். மலை உச்சி நோக்கிய அந்தப் பாதை செல்பவர் யாரும் திரும்ப முடியாதபடி மிகவும் குறுகலாக ஒற்றையடிப் பாதையாக இருக்கும். வளைந்து வளைந்து செல்லும் அந்தப் பாதையின் இறுதியில் ஒரு மலைக் கோவில் இருக்கும். அதை நெருங்கிய பின்னரே அது கோவில் அல்ல; ஒரு சர்ச் என்பது தெரியவரும். சீமான் கையில் இருந்த வேல் கம்பும் இப்போது சிலுவையாக மாறியிருக்கும். பின்னால் திரும்பவும் முடியாது. இரு பக்கம் அதல பாதாளம் வேறு.

காளையில் இருந்து இறங்கி, தயங்கியபடியே நிற்கும் இளவரசனையும் திவ்யாவையும் வாங்க என்று அழைப்பார். இப்போது அந்தக் குரல் அதிகார தொனியில் இருக்கும்.

இளவரசனும் திவ்யாவும் தலை குனிந்தபடியே சர்ச் நோக்கி நடப்பார்கள். பிரமாண்ட காண்டாமணி ஓங்கி ஒலிக்கும். அந்தச் சத்தம் கேட்டதும் மரங்களில் இருந்த பறவைகள் எல்லாம் அலறி அடித்து திசை தெரியாமல் பதறிப் பறக்கும்.

சீமான் அவர்களை அங்கிருக்கும் சிறிய சுனைக்கு அழைத்துச் செல்வார். பாதிரியார் ஒருவர் இவர்கள் இருவரையும் மூழ்கி எழுந்திருக்கச் சொல்வார். பயந்தபடியே இருவரும் ஸ்நானம் செய்வார்கள்.

நாங்கள் இந்துக்கள் அல்ல; நாங்கள் இந்துக்கள் அல்ல நாங்கள் இந்துக்கள் அல்ல என்று மூன்று முறை சொல்லிச் சொல்லி மூழ்கி எந்திரிக்கச் சொல்வார்.

பிதா, சுதன், பாதிரி இந்த மூன்று பேரே இனி எங்களுக்கு எல்லாமும் என்று சொல்லுங்கள் என்று அதட்டுகிறார்.

குல தெய்வங்களை இனி கும்பிடமாட்டேன் என்று சொல்லுங்கள் என்று மிரட்டுவார். இளவரசனும் திவ்யாவும் பயந்தபடியே அனைத்தையும் செய்வார்கள்.

இளவரசன் பட்டு வேஷ்டி கட்டிக்கொள்ளச் செல்வார். திவ்யா புடவை கட்டிக்கொள்ளச் செல்வார். அவற்றைப் பறித்து மூலையில் எறிவார் பாதிரியார். திருமணத் தம்பதிகள் நெற்றியில் அணிந்திருக்கும் திலகங்களை அழிப்பார் ஜெகத் கஸ்பர். நாகஸ்வரத்தை உடைத்து வீசி எறிவார் செபாஸ்டியன். கோட் சூட், ஃப்ராக் மாட்டி தம்பதிகளை சர்ச்சுக்குள் அழைத்துச் சென்று ஒரு மோதிரத்தைக் கொடுப்பார் பாதிரியார்.

திவ்யா கண்களில் நீர் கோர்க்க, அருகில் நிற்கும் செபாஸ்டினைப் பார்த்துக் கேட்பார்: நாம தமிழர்னு தான சொன்னீங்க. மோதிரம் மாத்தறது நம்ம பழக்கம் இல்லையே.

இப்ப புதுசா சேர்த்திருக்காங்கம்மா என்று சொல்லியபடியே தன் டிரேட் மார்க் சிரிப்பை உதிர்ப்பார். பாதிரியாரும் விழுந்து விழுந்து சிரிப்பார்.

சர்ச்சில் இருப்பவர்களில் ஒருவர் மங்கல காரியம் நடக்கும்போது மங்கல இசை ஒலிக்கவேண்டும் என்று பறையை எடுத்து இசைப்பார். பறைச் சத்தம் கேட்டதும் சர்ச் ஜன்னல்களின் கண்ணாடிகள் அதிரும். பாதிரியார் ஆவேசத்துடன் அதைப் பறித்து வெளியே வீசி எறிவார். அதை எடுக்க வெளியே பாயும் திவ்யாவை செபாஸ்டியன் மறிப்பார். தம்பதிகளை வழி மறித்தபடி மண்டியிட்டு உட்காரவைப்பார்கள்.

அப்போது சர்ச் சுவரில் விழும் அவர்களுடைய உருவங்களின் தலைக்கு மேலே இரண்டு கொம்புகள் முளைக்கும்.

இளவரசனும் திவ்யாவும் என்ன அதிசயம் என்று அதைப் பார்ப்பார்கள். செபாஸ்டியனும் பாதிரியும் கூட அதை ஆச்சரியமாகப் பார்ப்பார்கள்.

என்ன விஷயமென்றால் வீசி எறியபட்ட பறை காளைகளின்மேல் சென்று விழுந்திருக்கும்.

சர்ச் வாசலில் இரண்டு காளைகளும் ஆக்ரோஷமாக வந்து நின்றுகொண்டிருக்கும்.

செபாஸ்டியன் அதைப் பார்த்து சிரித்தபடியே, கல்யாண விருந்துக்கு காளை ரெடி என்று சொல்லியபடியே சத்தம்போட்டுச் சிரிப்பார். அதைக் கேட்டதும் காளைகளுக்கு மேலும் ஆத்திரம் ஏற்படும். நாலு கால் பாய்ச்சலில் பாய்ந்து வந்து பாதிரியையும் செபாஸ்டினையும் ஒரே குத்தாகக் குத்தி தூக்கி எறியும்.

இருவருடைய உடம்பும் சுவரில் மோதி ரத்தக் கோடு வரைந்தபடி கீழே விழும். சுவரில் தெரியும் சிலுவையின் நிழலின் மேல் இவர்கள் இருவருடைய ரத்தம் வழிந்த கோடு இரு பக்கமும் வழிவது திரிசூலம் போல் காட்சியளிக்கும்.

காளை ஆத்திரம் தணிந்து காதல் ஜோடியின் முன் பவ்யமாக வந்து நிற்கும். இளவரசன் காளையின் கூர்மையான கொம்பில் தன் கட்டைவிரலைக் கீறி வழியும் ரத்தத்தை திவ்யாவின் நெற்றியில் இட்டுவிடுவான். இருவரும் காளைகளின் மேல் ஏறிக் கொண்டு மங்கல வாத்தியங்கள் முழங்க தாய் நிலம் திரும்புவார்கள்.




*இதழ் முற்றும்*